March 2011

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

« Feb

- **இன்றுவரை...**
-
- பதிவுகள் :**12,147**
  கருத்துக்கள் :**27,056**
  வகைகள் :**119**
  பார்த்தவர்கள் : பார்த்தவர்க
-
-
- **தேசம்நெற்**

  தேசம்

  --தேசம்நெற் ஆசிரியர் குழு

**Mar**

**11**

# சிதறிப் போன கழகத்தைவிட்டு வெளிநாடு வந்தேன். - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 5 : ஜெ ஜென்னி

≡ Category: கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ | ≅

**தள மகாநாட்டில் எனது நிலை:**

1986 கடைசிப்பகுதி என நினைக்கின்றேன். தளத்திலுள்ள மத்திய குழு உறுப்பினர்கள், டெசோ,

தொழிற்சங்கம், அரசியல் பிரிவு உட்பட்டோரால் தள மகாநாடு கூட்டப்பட்டது. இதற்கு பின்தளத்தில் இருந்து கட்டுப்பாட்டு குழுவிலுள்ள அன்றைய அரசியல் துறைச்செயலர் வாசுதேவா, படைத்துறைச் செயலர் கண்ணன் (கட்டுப்பாட்டுக் குழு என்பது செயலதிபர், படைத்துறை செயலர், அரசியல் துறைச்செயலர் என்ற மூன்று பேரைக் கொண்டது.) ஆகியோர் வந்திருந்தனர். எனவே எல்லோரும் இவர்களை சந்தித்து அடுத்தடுத்த நாள் மகாநாடு பற்றியும் அதன் நகர்வு பற்றியும் பேசினோம். கடைசியாக நானும், மென்டிசும் இவர்கள் இருவரிடமும் பேசும் போது “இனியும் பின்தளத்தின் நிலையை மூடிமறைக்க முடியாது. எனவே இங்கு வந்த நீங்கள் அனைத்து தவறுகளையும் ஏற்றுக்கொண்டு, செயலதிபர் முகுந்தன், புலனாய்வு பொறுப்பாளர் கந்தசாமி உட்பட்ட முக்கியஸ்தர்களுடன் உங்களையும் சேர்த்து விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். விசாரணைகளை மேற்கொள்ள தளநிர்வாகத்துடன் சேர்ந்து ஒரு கொமிட்டியை உருவாக்க வேண்டும். பிழைகளை சரி செய்வோம் என்ற உறுதி கொடுங்கள். அதன் பின் இவற்றை நடைமுறைபடுத்த வேண்டிய ஒழுங்குகளை தளம் பின்தளமாக ஆராயலாம்” என்று விபரமாக கதைத்தோம்.

அடுத்த நாள் மகாநாடு 174 பேருடன் 5 நாட்கள் என்ற ஒழுங்குடன் ஆரம்பமானது. இதன்படி பின்தளத்தை நோக்கிய எல்லா குற்றங்களும் வைக்கப்பட்டு காரசாரமாக விவாதிக்கப்பட்டு நிகழ்ச்சி நிரல் நடைபெற்றது. இதில் பின்தளத்தின் சார்பாக வாசுதேவா முதலில் உரையாற்றினார். இவர் தனது உரையில் “பின் தளத்தில் நடைபெற்ற எந்த கொலைக்கும் எந்தச் சம்பவங்களுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. செயலதிபரும், கந்தசாமியுமே முழுச்சம்பவங்களுக்கும் பொறுப்புடையவர்கள். எனவே இங்கு எடுக்கும் எந்த நடவடிக்கைகளுக்கும் நான் கட்டுப்படுவேன்” என தனது வழக்கம் போலான பம்மாத்து அரசியலை வெளிப்படுத்தினார். இதற்கடுத்தாக கண்ணனும் தனது உரையில் வாசுவை ஒட்டிய கருத்துடன் விடயத்தை முன் வைத்தார்.

இதனை அடுத்து நான் உட்பட மத்திய குழு உறுப்பினர்களும் மென்டிசும் மிகக் கலவரப்பட்டோம். அடுத்த நாள் நிகழ்வில் என் மேல் குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. அதாவது,

1. ஜென்னி என்றும் பின்தளத்திற்கு விசுவாசமானவர் என்றும், ஜென்னி சார்ந்த மகளீரமைப்பு தன்னிச்சையாக செயற்படுவதுமான குற்றச்சாட்டு வைக்கப்பட்டது.
2. ரீட்டாவின் பாலியல் பலாத்காரம் ஒரு பொய்யான குற்றச்சாட்டு எனவும் அக்குற்றச்சாட்டு உண்மையானால் ரீட்டாவை இங்கு சாட்சியாக்கி எல்லாம் வெளிப்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.

நான் இந்த இரண்டு விடயத்திலும் தெளிவாகவே மேடையில் பதில் கூறினேன். முதலாவது குற்றச்சாட்டுக்கு எனது விளக்கம்: நான் நேரடியாக பின்தள நியமனமாக இருந்தாலும், தளத்தில் பொறுப்பெடுத்ததில் இருந்து தள நிர்வாகக் குழுவினருடனும் மத்திய குழுவினருடனும் இணைந்து தான் செயற்படுகின்றேன். அதுபோல் பத்து மாவட்டத்திற்கான பரவலான வேலைத்திட்டத்தின் பரவலான அறிக்கைகளை தளத்தில் சமர்ப்பிக்கும் அதே பிரதியைத்தான் பின்தளத்திற்கும் சமர்ப்பித்து வருகின்றேன். அதே போல் மகளீருக்குள்ளும் உயர்மட்ட நிர்வாகக் குழு என்ற செயற்பாட்டுடன் தான் செயற்படுகின்றோம். ஒட்டு மொத்த கழகத்தின் தவறுகளாலும் விமர்சனங்களாலும் தான் எமது மகளீரின் நிர்வாகக் குழுவில் தற்போது கடைசிக்கட்டத்தில் சில முரண்பாடுகள் வந்துள்ளன. ஆயினும் என்னால் முடிந்தளவு மகளிரமைப்பை சிதறவிடாமல் செயற்படுத்துவேன். இதுபோல் இதுவரை பல பிரச்சனைகள் வந்த போதும் தளத்திலுள்ள கழகமும் தள்ளாடித்தானே நிற்கின்றது. எனவே இங்கு கிடைக்காத அல்லது பதில்களை பின்தளத்தின் உரிமையோடு எனது பொறுப்பின் கடமையோடு உள்ளே முரண்பட்டாலும் வெளியே கவிழ்த்து கொட்டாமல் செயற்பட்டேன். மேலும் பின்தளத்தில் மகளீருக்கான ராணுவப் பயிற்சி என்றும் எனது கவனத்தில் இருப்பதால் பின்தளத்திற்கான தொடர்புகள், போக்குவரத்துக்கள், தொலைத்தொடர்பு செய்திகள் என்பன தவிர்க்க முடியாதே.

இரண்டாவதான ரீட்டா விடயத்திற்கு எனது விளக்கம்: ரீட்டாவின் விடயத்தை இங்கு சந்திக்கு கொணர்ந்து இந்த 174 பேரின் மத்தியிலும் விமர்சிக்க நான் தயாராக இல்லை. காரணம் விமர்சனம் என்ற பெயரில் ஒரு பெண்ணிற்கு நடந்த கேவலத்தை முன்வைத்தே அந்தப் பெண்ணை மேலும் ஆயிரம் தடவைக்கு மேலாக எல்லோரும் விளக்கம் என்ற பெயரில் கீறிக் குதற விட முடியாது. எனவே இதற்கான விளக்கத்தை இத்தள நிர்வாகத்தின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இறுதியில் எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட்டு அதன் மூலம் இவ்விசாரணைக்கென ஒரு தனிப்பட்ட குழு அமைக்கப்படும் பட்சத்தில், அத்தனை ஆதாரங்களோடும் சாட்சியங்களோடும் இதில் கொண்டுவர முடியும். அவரவர் அரசியல் சித்து விளையாட்டிற்கு எல்லாம் எம் மகளீரை வைத்து அரசியல் ஆதாயம் தேட மகளீரமைப்பு பொறுப்பாளர் என்ற முறையில் நான் உடன்பட முடியாது எனத் தெளிவாகக் கூறினேன்.

இந்த இரு நாட்கள் மகாநாட்டிற்கு இடையில் நான் தனிப்பட்ட முறையில் வாசுதேவாவிடம், "ஏன் அண்ணா நீங்கள் முக்கிய பொறுப்பில் இருந்து கொண்டு பல்டி அடித்தீர்கள். பின்தளத்தில் நடந்த அத்தனை கொலைகள், பிழைகளையும் பின்தள பிரதிநிதிகளாக வந்திருக்கும் நீங்கள் இருவரும் தானே கழகம் சார்பாக பொறுப்பெடுத்து மன்னிப்பு கேட்டுக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் உருவாகக்கப்பட இருக்கும் தள விசாரணைக்குழு ஒன்றிற்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கி இரு பக்கத்திலும் சமரசத்தை கொண்டுவந்து முரண்பாடுகளை களைந்து கழகம் புனர் நிர்வாகம் செய்யப்பட உதவி இருக்க வேண்டும். இதைவிடுத்து நீங்கள் செய்த வேலை அரசியல் சறுக்களாகவே உள்ளது" எனச் சுட்டிக்காட்டினேன். அதற்கு வாசுதேவா சிரித்துக் கொண்டு, "இங்கு இப்படி நடந்து கொள்வது தான் அரசியல் ர்ரிக்" என வழக்கம் போல் தான் ஒரு பம்மாத்து வாசுதான் என நிருபித்தார்.

இந்தவாறு 3ம் நாள் என நினைக்கின்றேன். பின்தள செயலதிபர், புலனாய்வு கந்தசாமி உட்பட்ட முக்கியஸ்தர்களுக்கும். தளத்தில் உள்ள எல்லா மாவட்ட ராணுவப் பொறுப்பாளருக்கும் (இவர்கள் எல்லாம் பின்தள நியமனங்கள் என்பதால்) எனக்கும், குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என முடிவாகியது. இதற்கான திட்டமிடல், செயற்படுத்தல் எல்லாம் சுப்பையா அல்லது கௌரிகாந்தன் என்பவராலும் அதன் பின்னணியான தொழிற்சங்க சத்யன், முத்து போன்றோராலுமே நிகழ்த்தப்பட்டது.

இந்த இடத்தில் தளத்திலுள்ள மத்தியகுழு உறுப்பினர் நால்வரும் ஆப்பிழுத்த குரங்காக இருந்தனர். இதில் சிவராமின் பாத்திரம் மூட்டை பூச்சி அரசியலாகவே இருந்தது. கழகத்தை புனர்நிர்மாணம் செய்ய முற்பட்ட தளமகாநாட்டு குழு மொத்தத்தில் இரு தளங்களுக்குமான சில உடன்பாடுகளை உருவாக்காமல் காழ்ப்புணர்ச்சிகளோடு குற்றப் பத்திரிகை வாசித்த கைதயாக போனது. பின்தளம் விட்ட அதே சர்வாதிகாரத் தன்மையும் குழுவாதங்களும், பழிவாங்கல்களுமே இங்கும் குடிகொண்டது. இந்நிலையில் மீண்டும் மீண்டும் பிழைகளே வளர்க்கப்படுவதை என்னால் சகிக்க முடியாத நிலை உருவாகியது. அதனால் நானாகவே தொடர்ந்தும் இதில் பங்கேற்க விரும்பாமல் மகாநாட்டு தளத்தில் இருந்து வெளியேறினேன்.

எனது வெளியேற்றத்தின் போது அசோக் மிக கலவரப்பட்டு இருந்தார். என்னைப் பின் தொடர்ந்து வந்து உள்ளே வரும்படியும் முடிவில் ஏதாவது ஒரு நல்ல முடிவுக்கு வருவோம் பொறுமை காத்திருங்கள் என நிதானப்படுத்தினார். ஆயினும் நான் பலவிதத்திலும் நம்பிக்கையற்ற நிலையில் இதிலிருந்து ஒதுங்கிக் கொண்டேன். இதுதான் தளமகாநாட்டில் எனது நிலை.

**தள மகாநாட்டிற்குப் பின் எனது நிலை:**

தள மகாநாட்டில் இருந்து வெளியேறிய நான் அன்றைய நிலையில் என்னை நம்பியிருந்த, யாழ் மாவட்டத்தில் தேங்கி நின்ற கிழக்கு மாகாண மற்றும் எல்லைக் கிராமங்களில் பங்காற்றிய வீட்டிற்கு திரும்ப முடியாது இருந்த 25 மகளீருக்கு பாதுகாப்பு, உணவு, இருப்பிட வசதிகள் உட்பட்ட அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருந்தேன். அந்நிலையில் அன்று யாழ் மாவட்டத்தில் சேவையாற்றிய சர்வோதய அமைப்பிடம் உதவிகேட்டு எம்மை தற்காலிகமாக நிலை நிறுத்தினோம். மேலும், முன்பே பல தடவை குறிப்பிட்டது போல் கழகத்தின் தலைமையிலும் தள - பின் தள நிர்வாகத்திலும் எனக்கு முரண்பாடுகள் இருந்தாலும் மற்றவர்கள் போல் என்னால் கழகத்தை தூக்கி எறிந்து போக முடியாத மனோநிலையில் இருந்தேன். அதேநேரம் தளமநாட்டின் பின் ஏதாவது மாற்றம் வருமென்று நம்பினேன். ஆனால் அதன் முடிவே கழகத்தை சிதறடித்ததாக முடிந்தது.

இந்நிலையில் பின்தளத்தில் ராணுவப் பயிற்சி முடித்த மகளீரும் (கழகத்தின் படகுப் போக்குவரத்து மிகப் பலயீனமாய் இருந்ததால்) சிறிது சிறிதாக நாட்டிற்கு திரும்பிக்

கொண்டிருந்தனர். இவர்களை முடிந்தவரை அவரவர் வீட்டிற்கே அனுப்ப வேண்டிய நிலையும் தவிர்க்க முடியாது இருந்தது. இந்நிலையில் புலியின் கெடுபிடியும் தொடங்கிய நிலையில் எமது அமைப்புக்கள் எல்லாவற்றிற்கும் நெருக்கடியாக இருந்தது. இந்நிலையில் தளத்தின் நிர்வாகம் பொதுவாக குழம்பிய நிலையிலும் இவர்களால் இம்மியளவும் மகளீருக்கான எந்தவித அக்கறை காட்டப்படாத நிலையுமே காணப்பட்டது. அதனால் நான் பின்தளம் சென்று அடுத்த கட்டம் என்ன செய்வதென்று அங்கு கடைசியாக புறப்படுவதற்கு நின்ற சில மகளீருடனும் பேசினேன்.

தளமகாநாட்டிலேயே வாசுதேவா, கண்ணண் அவர்களின் பல்டி அடித்த நடவடிக்கையும் அதைத் தொடர்ந்து தளத்தின் செயற்பாடுகளையும் கருத்திற்கொண்டு செயலதிபரிடம் பல விடயங்களை கலந்துரையாடி ஏதோ செத்தாலும் நாட்டிற்குப் போய் சாவோம் என்ற நிலையில் மீண்டும் படகு பயணத்திற்கு புறப்பட்டோம். இந்நிலையில் நான் உட்பட மூன்று பெண்கள் கடைசியாக புறப்படுவதற்கு இருந்த காலகட்டத்தில் (வேதாரண்யம் - ராமேஸ்வரம் என்ற இருபக்கக் கரையும்) படகுப் பயணம் மேற்கொள்ள முடியாத நிலையில் திரும்பி சென்னைக்கு வந்தோம்.

இந்நேரம் சென்னை அலுவலகத்தில் இருந்தும் சில தோழர்கள் தலைமையிடம் சொல்லிக் கொண்டே வெளியேறிய நிலையில் இருந்தனர். அங்கு சில கழக வேலைகளில் ஈடுபட்டோம். இந்நிலையில் மற்றைய இரு மகளீரின் பெற்றோர், உறவினர் சென்னை வந்து சேர்ந்தனர். உறவினர் வந்தும் இந்த இரு மகளிரும் கழகத்தையோ என்னையோ விட்டு போகமுடியாது என்ற நிலையில் அடம் பிடித்தாலும் நான் பெற்றோரிடம் பேசி சில முடிவுகளை எடுத்து சிலகாலம் அவர்களின் பெற்றோர் சென்னையில் தங்கியதால் அவர்களுடன் இம்மகளீரையும் இணைத்து விட்டேன்.

இக்காலகட்டத்தில் தளத்தில் புலிகளால் கழகத்தினர் தேடித்தேடி அழிக்கப்பட்டனர். மென்டிஸ் போன்றோர் கொல்லப்பட்டனர். படகுச் சேவை முற்றாக துண்டிக்கப்பட்டு இருந்தது. நான் சென்னையில் முடங்க வேண்டி இருந்தது. அப்போது கண்ணணால் ஃஒபர் எனப்படும் தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன் அவர்களால் நடத்தப்படும் அகதிகள் புனர்வாழ்வு அலுவலகத்தில் அலுவலக வேலைக்கு சேர்க்கப்பட்டேன். அங்கு தங்கத்துரை எம் பி, குகதாசன் (எமது திருமலை காந்தீய தலைவராக இருந்தவர்.), ஈழத்துநாதன் (திருமலை கூட்டணியின் முக்கியஸ்தரும் அரசியல் காரணங்களுக்காக எனது தாயாருடன் (1984) பிடிபட்டு சிறை இருந்தவரும், சொர்ணத்தின் அத்தானும், முக்கியமாக எமது குடும்ப நண்பருமானவர்.) ஆகிய எனது ஊரவரே நிறையப் பேர் இருந்தனர். இப்படியாக டைப்பிஸ்டாக வேலை செய்த நிலையிலும் இருந்தேன்.

எந்தக் காலத்திலும் எனக்கு பார்த்தனின் பெற்றோர், சகோதரரின் தொடர்பும், பாசமும், அனுசரனையும் பண உதவிகளும் இருந்தது. இந்நிலையில் பார்த்தனின் தாயார் என்னை சென்னையில் வந்து பார்த்தார். எனது கடைசிக்கால கட்ட நிலைமைகளை கண்ணால் பார்த்தார். “கழகம் இன்று சிதறிய நிலையிலும் நீ இங்கு நிற்க வேண்டிய தேவையுள்ளதா? இதுவரை எனது பெண் பிள்ளைகள் என கட்டி அழுதாய். இப்போ எல்லோரையும் முடிந்தளவு செட்டில் பண்ணியாக விட்டாகி விட்டதுதானே. புலிப் பிரச்சினையாலும், இலங்கையரசு பிரச்சினையாலும் நீ நாட்டிற்கு திரும்ப முடியாது. எனவே எனது மற்றைய இரு ஆண் பிள்ளைகள் வெளிநாடுகளில் இருப்பதால் அவர்களுடன் போய்ச் சேர். அவர்களும் உன்னை அனாதையாக இங்கு அலைய விட முடியாதென பலவிதத்தில் கவலைப்படுகின்றனர். அவர்கள் எல்லா வழிகளையும் செய்வார்கள், இயக்கத்தில் கடைசிப் பெண்ணாக இதுவரையில் நீ பட்டது போதும். நான் உமாவுடன் கதைக்கின்றேன். நீ புறப்படு” எனக்கூறி செயலதிபருடனும் அத்தாய் கதைத்தார்.

செயலதிபரும் பார்த்தனின் தாயாரை அன்புடன் வரவேற்று, “ஜென்னியின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு நாம் என்றும் குறுக்கே நிற்கமாட்டோம். உங்கள் இருவரின் விருப்பப்படியே செய்யுங்கள்” என்றார். எனது மாமியார் தாய் ஸ்தானத்தில் இருந்து தனது இரு பிள்ளைகள், மூலம் எனது வெளிநாட்டு பயண ஒழுங்குகளை செய்தார். கனடாவில் இருக்கும் பார்த்தனின் அண்ணா உதயச்சந்திரனும் தம்பி லோகேஸ்வரனும் எனக்காகப் பல உதவிகளைச் செய்தனர். இன்றுவரை வெளிநாட்டில் உள்ள அவர்களும் நாட்டிலுள்ள பார்த்தனின் குடும்பஸ்தர் ஒவ்வொருவரும் என்னில் அன்பும், மதிப்பும், மரியாதையும் வைத்துள்ளனர். கனடாவில் உள்ள தமது பிள்ளைக்கு ஜெயபார்த்தன் என்றும்

லண்டனிலுள்ள பார்த்தனின் அக்காவின் மகனுக்கு ஜெயச்சந்திரன் என்ற பெயரையும் வைத்து இறந்த ஜெயாவையும் இருக்கின்ற என்னையும் மறக்காமல் இருக்கின்றனர்.

வெளிநாட்டுப் பயண ஒழுங்கு சரிவரும் வரையில் ஒரு ஹொஸ்டலில் தங்கி ஃஒபர் அலுவலகத்தில் வேலை செய்தாலும் அங்கும் சில பிரச்சனைகளை முகம் கொடுத்தேன். எனினும் எனது பெற்றோரின் அரசியல் பின்னணியால் பின்பு அங்குள்ளவர்க்கு என்னை அடையாளம் காண முடிந்தது. (இன்றுவரை சந்திரகாசன், சூரியகுமாரி போன்றோரின் நட்புகளை பேணுகின்றேன் என்பது குறிப்பிடத்தக்கது.)

இந்தப் பயண ஒழுங்குகள் முற்றுப்பெறாத நிலையில் செயலதிபர் என்னைக் கூப்பிட்டு வாசுதேவா, கண்ணன், குழுவினருடன் நாட்டிற்கு போவதென்றால் உடனே புறப்படும்படியும் நாளை விமானப் பயணம் உடனே மேற்கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டார். நான் இந்த வெளிநாட்டுப் பயணத்தையும் விட்டு விட்டு நாட்டில் சென்று மீண்டும் மக்கள் மத்தியில் வேலை செய்யத் தயார். ஆனால் கழகம் இன்னும் எந்த இடத்திலும் முற்று முழுதாக தன்னை விமர்சனம் செய்யவில்லை. மேலும் இந்த பச்சோந்திகளான வாசுதேவா, கண்ணன் அவர்களுடன் என்னால் நேர்மையான அரசியல் செய்ய முடியாது. எனவே எனக்கு இதில் உடன்பாடில்லை. கழகம் என்று சுயவிமர்சனத்துடன் அடி எடுக்கின்றதோ, அன்று எங்கிருந்தாலும் நான் மனப்பூர்வமாக கழகத்துடன் வேலைசெய்வேன் என்று கூறியிருந்தேன்.

இவற்றையெல்லாம் நான் ஏன் இங்கு குறிப்பிடுகின்றேன் என்றால் நான் கடைசி மட்டும் கழகத்தின் மேல்மட்டத்தில் எந்த தயவு தாட்சணியமுமின்றி விமர்சனத்தை வைத்திருந்தேன். அதற்காக எனது தாய்வீடு கழகம் தான் என்ற எனது சிந்தனையை மாற்ற முடியாதிருந்தது. எந்தக் காலத்திலும் விட்டு விட்டு ஓடமுடியாத அரசியல் வாழ்வும் அதில் கழகமும் இருந்தது.

நான் 1987 கடைசிப் பகுதியில் வெளிநாட்டிற்கு வந்தாலும் இன்றுவரை என் சொந்தப் பெயராக்கப்பட்ட ஜென்னி என்ற முகத்துடனேயே செயற்படுகின்றேன். சமூகப்பணிகள், பெண்விடுதலை ஸ்தாபனங்கள், எழுத்து வடிவங்கள், அரசியல் என எனக்கென்று ஒரு வரைமுறை அரசியல் உண்டு. ஏனெனில் நான் இங்கிருந்தாலும் நாட்டில் இதுவரை என்னால் செய்யக்கூடிய பணிகளை செய்து கொண்டுதான் இருக்கின்றேன். இவற்றையெல்லாம் நான் எனது மனச்சாட்சிக்காக மட்டுமே செயல்படுத்துகின்றேன். இதனால் பலாபலன் பெறுபவர்களுக்கு மட்டும் தெரிந்தால் போதும்.

இப்படியான பொது மனப்பான்மையின் நிமித்தம் தான் ஐந்தாறு வருடங்களுக்கு முன் பெங்களூரிலுள்ள அகதி குழந்தைகளுக்காக ராஜன் என்ற ஞானசேகரன் அவர்களால் நடாத்தப்படும் பாடசாலை பற்றி பிரான்ஸிலுள்ள கண்ணன் என்ற பழைய கழகத் தோழரும் பின் ஈ.என்.டி.எல்.எப். உறுப்பினருமாக இருந்தவரால் இந்த பாடசாலை விபரம் சில வீடியோ பதிவுகள் மூலம் அறியத்தரப்பட்டது.

அந்த காலகட்டத்தில் 2006ல் எனது தனிப்பட்ட விடயமாக சென்னை சென்ற சமயம், இந்த பெங்களூரில் வாழும் எமது அகதி மக்களுக்கான எம்மவரின் குழந்தைகளின் பாடசாலையான 'இந்திராகாந்தி இன்டனெஷனல் அக்கடமி' என்ற ஆங்கில பாடசாலையை பார்வையிட முடிந்தது. இப்பாடசாலை 1990 முதல் இயங்கி வருகிறது. இங்கு பாலர் பாடசாலையில் இருந்து 'ப்ளஷ் 2' வரையிலான இந்திய கல்வி வரையறைகளுக்கு உட்பட்ட கல்வி தகமை முறைகளும் அதற்கப்பாலும் பிள்ளைகளின் மேற்படிப்பிற்கான ஒழுங்குகளுமாக சிறப்பாக நடைபெற்றது. இங்கு ஆண் பெண் என்ற இருபாலர்களும் படிக்கின்றனர். அதிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனித்தனியான தங்குமிட வசதிகளும் பாடசாலையை சுற்றி அமைக்கப்பட்டு இருந்தது.

இங்கு சில நாட்கள் தங்கிய போது இங்கு நான் கண்ட ஒரு நேர்த்தியும் கட்டுப்பாட்டுத்தன்மையும், அகதிக் குழந்தைகளுக்கான ஒளிமயமான எதிர்காலத்திற்கான ஒழுங்கமைப்புக்களையும் பார்க்கும் போது நான் 1979ல் காந்தீய தொண்டர் ஆசிரியர் பயிற்சிக்கு கிளிநொச்சியில் உள்ள குருகுலம் பயிற்சி முகாமில் இருந்தமையும் அதன் அடுத்த கட்ட வேலைத் திட்டங்களும் கண்முண்ணே தெரிந்தது. அன்று எந்த மலையக மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்காக படிமுறையில் காந்தீயம் செயற்பட்டதோ அதே வடிவம்தான், அதன் உழைப்புத்தான் ஒப்பீட்டளவில் இங்கும் காணப்படுவதை கண்கூடாக

கண்டேன். எனவே இந்தப் பணியே எனது அறிவுக்கு எட்டியவிதத்தில் அழிந்து கொண்டு - சீரழிந்து கொண்டிருக்கும் ஒரு சமூகத்தை சரியான பாதையில் வழிநடத்தும் செயற்பாட்டை இங்கு கண்டேன். இதன் பிற்பாடு அந்த பொதுச்சேவையில் ஈடுபாடு காட்டினேன்.

அதற்கும் அப்பால் திரு ஞானசேகரன் அவர்களின் கட்சி ஈடுபடும் இந்திய அரசியல் பார்வையும் எனக்குச் சரியாக இருந்தது. இன்று உலக வலைப்பின்னல் அரசியலிலும், இந்து சமூத்திர அரசியல் ஆய்வுகளின் படியும் இந்தியாவின் மத்திய அரசின் அனுகூலம் எமது ஈழத்தமிழர் பிரச்சனைக்கு ஒரு வழிகோலும் என்று முழுமையாக நம்புகிறேன். மேலும் பெற்றோரின் குடும்ப அரசியலோடு வளர்ந்ததாலும் எனது இளமைக் காலத்தில் இருந்து அரசியலே எனது வாழ்க்கை ஆனதாலும் எனக்கு எப்போதும் இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளோடு தொடர்புகள் இருந்து வருகிறது. இன்றைய தமிழரங்கத்தில் உள்ள அதிகமான அத்தனை தலைமைகளுடன் தனிப்பட்ட முறையில் எனக்கு நட்பு உள்ளது. நான் தற்போது சார்ந்துள்ள ஈஎன்டிஎல்எப் கட்சியின் சார்பு நலையிலும் நல்ல உறவுகளையே பேணுகின்றோம்.

அதற்காக இலங்கை அரசின் வேலிக்குள் மாட்டித்தான் சிக்குபட நாம் விரும்பியதில்லை. இந்திய வேலிக்குள் செயற்படுவது எமது அரசியல் வழிப்பாதை. இதனை இத்தலைமைகளும் புரிவார்கள். முக்கியமாக கழகத்தின் தலைவர் சித்தார்த்தருடனும் அவர் சார்ந்த ஏனையோருடனும் மிகுந்த நட்பு உண்டு. சுயநலங்களினுடான பிரித்தாளும் தந்திரங்களை இனியாவது அடையாளம் காண பழகிக் கொள்ள வேண்டும். எம் ஈழத் தமிழ் மக்களின் விடிவிற்காய் எம்மால் என்றும் புரிந்துணர்வுகளுடன் ஒரு கைகோர்த்த அரசியலைத் தான் நாம் எதிர்காலத்தில் முன்னெடுக்க முடியும்.

இதுவே தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடனான எனது காலம் பற்றிய சுருக்கமான பதிவு.

._._._._._.

இங்கு நான் எனது மனசாட்சிக்குக் கட்டுப்பட்டு எனக்குத் தெரிந்த உண்மையுடன் இப்பதிவினை மேற்கொண்டு உள்ளேன். நான் கழகத்தின் மீதும் அதன் தலைமை மீதும் என்றும் விசுவாசத்துடன் இருந்துள்ளேன். கழகமும் குறிப்பாக அதன் தலைமை பல தவறுகள் விட்ட போதும் அதனைச் சீர்படுத்தி கழகத்தை சிதறடிக்காமல் செயற்பட்டு இருக்க வேண்டும் என்றே இன்றும் கருதுகிறேன். கழகமும் அதன் தலைமையும் தவறு என்று சொல்லி வெளியேறியவர்களும் சரியான அரசியலை முன்னெடுக்கவில்லை என்பது இன்று அனுபவரீதியாக நிரூபிக்கப்பட்டு உள்ளது. பொறுப்பில் இருந்தவர்கள் அன்று தள மாநாட்டை நேர்த்தியாக நடத்தி இருந்தால் கழகத்தை சிதறடிக்காமல் சீர்திருத்தி நகர்த்தி இருக்க முடியும். நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட அரசியலுக்கும் பார்த்தன் போன்றவர்கள் தங்கள் இன்னுயிர்களையே அர்ப்பணித்ததற்கும் ஒரு அர்த்தம் இருந்திருக்கும்.

புளொட்டில் நடந்த உட்படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரை யாராலும் உறுதிப்படுத்தப் படவில்லை. ஆனால் சில பத்துப் பேரில் இருந்து சில நூறுபேர் வரை கொல்லப்பட்டு இருக்கலாம் என கணிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆனால் கழகத்தில் இருந்து வெளியேறியவர்கள் கூட உட்படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரங்களை முழுமையாகவோ பகுதியாகவோ வெளியிடவில்லை.

கழகத்தில் இவ்வாறான படுகொலைகள் அராஜகங்கள் இருந்த போதும் அதனை விமர்சிக்கின்றவர்களும் அந்த விமர்சனங்களை ஏற்றுக்கொள்கின்ற பக்குவம் உடையவர்களும் கழகத்தில் இருந்துள்ளனர். ஆனால் முள்ளிவாய்க்கால் வரை தமிழ் மக்களை அழைத்துச் சென்றவர்கள் தங்கள் அமைப்புக்கு உள்ளேயே பல நூறு பேரை உட்படுகொலை செய்து இயக்கத் தலைமையை வளர்த்து இறுதியில் மக்களையும் பணயம் வைத்து அழித்துள்ளனர்.

கழகம் அழிக்கப்படாமல் சீர்திருத்தப்பட்டு இருந்தால் ஒருவேளை இவ்வாறு பிற்காலங்களில் ஏற்பட்ட பாரிய அழிவைத் தடுத்திருக்க முடிந்திருக்கும் என்ற எண்ணம் எப்போதும் எனக்கு ஏற்படுவதுண்டு. ஆனால் இவை எல்லாம் காலம் கடந்தவையாகி

விட்டது. கழகத்தின் தலைமை தவறிழைத்தது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அதனை நிராகரித்து வெளியேறியவர்களாலும் கூட ஏன் காத்திரமான ஒரு அரசியலை முன்னெடுக்க முடியவில்லை என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எப்போதும் எழுகிறது. அந்த உண்மையையும் அறிய ஆவலாக உள்ளேன்.

இந்த ஐந்து தொடரிலும் முழுமையாக ஒவ்வொரு விடயத்தையும் கொண்டுவர முடியாது. இருந்தாலும் முக்கிய விடயங்களை எனது நினைவில் இருந்து மீட்டுப் பதிவு செய்துள்ளேன். எனது பதிவுகள் தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் விமர்சன ரீதியான கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் என்னால் முடிந்தவரை பதில் தருவேன்.

**குறிப்பு:**

*ஜெ ஜென்னி யின் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் தொடர் இப்பகுதியுடன் நிறைவடைகிறது. இத்தொடரில் பலருக்கு விமர்சனங்களும் சந்தேகங்களும் கேள்விகளும் உள்ளதை நாம் அறிவோம். அவற்றை நேரடியான சுருக்கமான கேள்விகளாக இங்கு பதிவிடவும். அவற்றுக்கான பதில்களை ஜெ ஜென்னியிடம் பெற்று அவருடைய பதிவின் முடிவாகப் பிரசுரிப்போம்.*

**தேசம்நெற்.**

**தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - வரலாற்றுக் குறிப்புகள்**
**முன்னைய பதிவுகளுக்கு:**

சிதறிப் போன கழகத்தைவிட்டு வெளிநாடு வந்தேன். - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 5 : ஜெ ஜென்னி

இன்றும் மறைக்கப்படும் தோழி ரீட்டா மீதான அவலம் - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 4 : ஜெ ஜென்னி

அகிலன் - செல்வன் படுகொலை! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் - எனது சாட்சியம் - பகுதி 3 : ஜெ ஜென்னி

கழக முக்கிய உறுப்பினர்கள் வெளியேற்றம்! சுழிபுரம் படுகொலைகள்! தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 2 : ஜெ ஜென்னி

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் எனது சாட்சியம் - பகுதி 1 : ஜெ ஜென்னி

நினைவுப் பதிவுகளில் இருந்து - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தோற்றம்! : நிலா (முன்னாள் கழகப் போராளி)

எழுத்தில் வல்லவன் எழுதுவது வரலாறு அல்ல! கண்ணாடிச் சந்திரன் உண்மையைத் தேட வேண்டும்! - கழக வரலாற்றுக் குறிப்பு: ராம் (தேசம்நெற் கருத்தாளர்)

பேராதனை கம்பஸில இருந்து றொறன்ரோ - புளொட் இறக்கம்! தீப்பொறி இறக்கம்! மணியண்ணை றைட் : பொறிமகன்

புலிகளின் கண்ணாடி விம்பமே புலிகளை வென்ற அரசு. - கேணல் கிட்டு மீதான கைக்குண்டுத் தாக்குதலும் அதன் எதிர்வினைகளும் : த ஜெயபாலன்

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (2)

தமிழீழ மக்கள் விடுதலை கழகம் - கடந்து வந்த தடங்கள் - பகுதி (1)

« ஒடுக்கப்பட்ட இனங்களின் கல்வியில் முதலீடு செய்வது அவர்களுடைய அரசியல் எதிர்காலத்திற்கும் அவசியமானது. : த ஜெயபாலன் | Home | ஜப்பானின் சுனாமி 32 பேர் பலி »

**Related posts:**

- Will be added soon here...
-

**உங்கள் கருத்து**

This entry was posted on Friday, March 11th, 2011 at 12:17 am and is filed under கட்டுரைகள்/ஆய்வுகள், ஜென்னி ஜெ. You can follow any responses to this entry through the RSS 2.0 feed. You can leave a response, or trackback from your own site.

**26 Comments so far**

1. Ajeevan on March 11, 2011 12:43 pm

   ஜென்னி எழுதிய விடுதலைப் பயணக் குறிப்பில் நீங்கள் வெகுவாக நெருங்கிப் பழகிய வாமதேவன் (வாமர்) குறித்து எதுவித கருத்தும் இங்கே இடம் பெறமல் இருக்கிறது. நீங்கள் இலங்கையில் அவரோடு நெருங்கிப் பழகினீர்கள். பின்னர் வெளிநாடு வரு முன்னும் கழகத்தை விட்டு வெளியேறி பம்பாயில் கெப்டன் குமாராக வாழ்ந்த வாமரோடு நின்றீர்கள்.

   உங்களை நான் முதலில் உடப்பில் வைத்து வாமரோடு சந்தித்தேன். பின்னர் உரத்தநாட்டில் அல்லது சென்னையில் சந்தித்தாக நினைவு. பின்னர் பம்பாயில் வாமர் தங்கியிருந்த லாஜில் வைத்து சந்தித்தேன். கடைசியாக எதிர்பாராதவிதமாக கலைச்செல்வனின் இறுதி நிகழ்வில் உங்களை சந்தித்தேன்(இங்குதான் உமாவின் மனைவி பேபி அக்கா மற்றும் அவரது (உமாவின்) தம்பி ஆகியோரோடு பல பழைய புளொட்காரர்களை சந்திக்கக் கிடைத்தது.).

   வாமர் குறித்து ஏதாவது எழுதுவீர்கள் என நினைத்தேன்? காணவில்லையே?

2. தவம் தேவராசா on March 11, 2011 8:45 pm

   யாழ் கந்தரோடையில் நடைபெற்ற தள மகாநாட்டை முன் நின்று துணிந்து நடத்திய பெருமை தொழிச் சங்கத்தைச் சேர்ந்த தோழர்கள் கௌரிகாந்தன் (சுப்பையா) /முத்து /சத்தியன்/ ராஜன் /சேரன் /தவநாதன் / ஐபி என்ற மூர்த்தி இவர்களையும் இவர்களுக்கு பக்கதுணையாக பலமாக இருந்த ரெசோ தோழர்கள் கப்பி என்ற மகிழ்ச்சி/ தமிழ்/ குருபரன்/தீபநேசன் /தனஞ்செயன்/ கலா/ கண்ணாடி ரகு முதலியோர்களையும் இந் நேரத்தில் நினைவு கூறல் தகும். தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகத்தினுள் உட்கட்சிப்போராட்டத்தை நடாத்துவதற்கு வழிகாட்டியாக இறுதிவரை இருந்த தோழர் கௌரிகாந்தன் கழக உட்கட்சிப்போராட்ட வரலாற்றை எழுதுவதற்கு எல்லாத் தகுதியும் கொண்டவர். மேற்கூறிய இத் தோழர்கள் இப்போது எங்கெங்கு வாழ்கிறார்களோ தெரியாது. அவர்கள் தங்களது அனுபவத்தை தேசத்தில் வந்து எழுதவேண்டும்.என்னைப்போன்ற பழைய கழகத் தோழர்களது விருப்பம்.

   குறிப்பு: தோழர் சத்தியன் தளமகாநாடு நடந்து சுமார் ஒருவருடத்திற்குப் பின் வவுனிக்குளத்தில் வைத்து மாணிக்கதாசன் குழுவினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.இந்தக் கொடுமையை எல்லோரும் மறந்துவிட்டார்கள். இந்த நேரத்தில் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவோம்.

3. London Boy on March 11, 2011 9:49 pm

   //எனது பதிவுகள் தொடர்பாக நீங்கள் முன்வைக்கும் விமர்சன ரீதியான கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் என்னால் முடிந்தவரை பதில் தருவேன்.// ஜென்னி முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவு விபரங்களைத் தந்துள்ளார். தனது அரசியல் சார்புநிலையை மறைக்க முயற்சிக்கவில்லை. தனது தவறுகளை அரசியல் முதிர்ச்சியின்மையை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். அது பாராட்டுக்குரியது. இருந்தாலும் எனக்குள் சில சந்தேகங்களும் கேள்விகளும் எழுகிறது.

   1. நீங்கள் கழகத்தின் தலைமை விசுவாசம் காரணமாக தலைமைக்காக நீங்கள் அறிந்து உளவு வேலைகளில் ஈடுபட்டிர்களா?

   2. நீங்கள் அறிந்து அல்லது அறியாமல் வழங்கிய தகவல்கள் கழகத்தில் இருந்து

வெளியேறியவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டதா?

3. அகிலன் - செல்வன் படுகொலையில் இவர்களுக்கு எதிராக நீங்கள் எப்போதாவது குற்றச்சாட்டு எதையாவது வைத்திருந்தீர்களா?

4. உமா மகேஸ்வரன் கந்தசாமி மாணிக்கதாசன் போன்ற கழக உட்படுகொலைகளுக்கு பொறுப்பானவர்களுடன் உங்களுக்கு இருந்த நெருக்கம் - நட்பு - தோழமை எவ்வாறு சாத்தியம்?

5. நாம் எல்லோருமே மனிதர்கள். தவறு விடக்கூடியவர்கள். ஆனால் சிலரே தாம்விட்ட தவறுகளை வெளிப்படுத்தும் பெருந்தன்மையையும் தைரியத்தையும் கொண்டுள்ளனர். அப்படியாயின் கழகத்தில் நீங்கள் இருந்த காலப்பகுதியில் நீங்கள் விட்ட பாரிய தவறுகளைப் பட்டியலிட முடியுமா?

4. பல்லி on March 11, 2011 10:23 pm

லண்டன் பையனின் கேள்விகளுக்கு சரியான அல்லது நம்பதகமான பதில் கிடைக்கும் என நினைக்கிறேன், அதன்பின் என் கேள்விகளை தொடர்கிறேன்

5. சாந்தன் on March 12, 2011 12:32 am

//////……புளொட்டில் நடந்த உட்படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை இதுவரை யாராலும் உறுதிப்படுத்தப் படவில்லை. ஆனால் சில பத்துப் பேரில் இருந்து சில நூறுபேர் வரை கொல்லப்பட்டு இருக்கலாம் என கணிப்பிடப்பட்டு இருக்கிறது. …///

///…….. ஆனால் முள்ளிவாய்க்கால் வரை தமிழ் மக்களை அழைத்துச் சென்றவர்கள் தங்கள் அமைப்புக்கு உள்ளேயே பல நூறு பேரை உட்படுகொலை செய்து இயக்கத் தலைமையை வளர்த்து இறுதியில் மக்களையும் பணயம் வைத்து அழித்துள்ளனர்……///

ஆஹா…..ஆஹா….அற்புதம் அற்புதம் ஜென்னி!
நீங்கள் சார்ந்திருந்த கழகத்துக்குள் நடந்த கொலைகள் கணக்கு சரியாக தெரியாதாம். ஆனால் புலிக்குள் நடந்த கொலைகள் தெரியுமாம். அப்பாடா! போட்டீங்களே ஜென்னி ஒரு போடு. புளொட் பிரச்சாரப்பிரிவின் 'வக்கிர புலிஎதிர்ப்பு புலுடாக்கள்' இன்னும் உங்களின் இரத்தத்தில் நன்றாகத்தான் ஊறி இருக்கிறது. சும்மா சொல்லக்கூடாது அட்டகாச ஆள்தான் நீங்கள்!

6. nanee on March 12, 2011 2:59 am

மனம் திறந்து எழுதியதற்கு நன்றி. உண்மையும் பொய்யும் உங்களுடன் இருந்தவர்களுக்கு தான் வெளிச்சம். அனைத்து போராட்ட வரலாறுகளுமே வென்றவர்களால், அவர்கள் சார்பாக தான் எழுதப்பட்டன. இதில் புளொட் வரலாறு எம்மாத்திரம். ஒன்றாக இருந்தவர்களே முரண்பட்ட செய்திகளை எழுதிக்கொண்டிருக்கும் போது உண்மையை மட்டும் கொண்டுவருவது என்பது சாத்தியமற்றது. 3 வருடங்கள் கழகத்தில் இருந்த எனக்கே ஏன் இப்படி நடந்தது என இன்னமும் கேள்விகள் மனதில் வந்து கொண்டிருக்கும்போது உங்கள் போன்றவர்களுக்கு எப்படி இருக்கும்.

எனது தனிப்பட்ட கருத்து முழுப்பிழைகளுக்கும் தலைமை தான் பொறுப்பு. அவர்களை மீறி எதுவும் நடக்கவில்லை, அவர்களுக்கு எதுவும் தெரியாமலும் இருக்கவில்லை. பிழைகள் நடப்பாதாக தெரிந்தபின்னும் மூடிமறைத்து தொடர்ந்தும் பிழையான பாதையில் தான் போனார்கள். அனைத்து இயக்கங்களுக்கும் இது பொருந்தும். எனது ஆதங்கம் என்னவென்றால் இப்படியானவர்களை போராட வந்த உண்மையான நேர்மையானவர்களால் ஏன் வெல்ல முடியாமல் போனதென்று?

7. mao on March 12, 2011 10:40 am

மலையக பெண்மணியை மணைவியாக கொண்ட மதிப்புக்குரிய தோழர் கௌரிகாந்தன் தமிழ்நாட்டில் அண்ணாமலை பகுதியில்லுள்ள இலங்கையகதி முகாமில் இருக்கிறார். இது எனக்கு கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு முன்வந்த செய்தி தவம் தேவராசா.

இயக்கங்களின் கொலைவெறிக்கு அந்த உத்தமமனிதர் அகப்படவில்லை என்பது தான் எம்மை மகிழ்விக்கும் செய்தி. ஈழமக்கள் விடுதலைக் கழகத்தில் பங்கு கொண்டிருந்தார் என்பதை தாங்கள் மூலமாகவே அறிகிறேன்.

8. தோஸ்து on March 12, 2011 10:50 am

//புளொட் பிரச்சாரப்பிரிவின் 'வக்கிர புலிஎதிர்ப்பு புலுடாக்கள்' இன்னும் உங்களின் இரத்தத்தில் நன்றாகத்தான் ஊறி இருக்கிறது. சும்மா சொல்லக்கூடாது அட்டகாச ஆள்தான் நீங்கள்!//சாந்தன்
அவர் எதற்கு பயிற்றுவிக்கப்பட்டாரோ அதை தொடர்கிறார். சொந்தமான அறிவும் செயற்பாடுமிருந்தால் அவர் ஏன் இந்திய எடுபிடியாக இப்போ அவதாரமெடுக்கிறார். உமாவிடமிருந்து கற்றதை பரந்தன் ராஜன் குழுவில் முதலீடு செய்கிறார்.

9. தவம் தேவராசா on March 12, 2011 1:28 pm

தோழர் கௌரிகாந்தன் தகவல் சொன்னதிற்கு மாவோக்கு நன்றி. இன்று ஐரோப்பாவில் வாழும் ரெசோ மாணவர் அமைப்பு தோழரோடு பேசினேன். சில விபரங்கள் சொன்னார். சில இணையத் தளங்களில் ரெசோ மாணவர் அமைப்பைப் பற்றி பிழையான தகவல்கள் வெளிவந்து கொண்டிருப்பதாக மனவருத்தப்பட்டார். கழகத்தில் உட்கட்சிப் போராட்டம் பற்றி தோழர் கௌரிகாந்தன் எழுதுவதுதான் உண்மையாக இருக்குமென்று அவரும் அபிப்பிராயப்பட்டார்.

அசோக் தோழரோடு ரெசோ / தொழிற்சங்க தோழர்கள் உட்கட்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் பலர் இன்னும் தொடர்பில் இருப்பதாக தான் அறிந்ததாகவும் இந்த முயற்சியை தோழர் கௌரிகாந்தனோடு இணைத்து இந்த தோழர்களின் உதவியைப் கொண்டும் ஏன் ஒரு வரலாற்றை எழுத முடியாது எனவும் கேட்டார். ஆளுக்காள் ஒவ்வொரு வரலாறு சொல்லி எங்களை குழப்புகிறார்கள்.

அத்தோடு நான் எழுதிய தகவலில் விடுபட்ட தவறு ஒன்றையும் சுட்டிக்காட்டினார். கழக உட்கட்சிப் போராட்டத்தில் மிக கடுமையாக போராடிய தோழர் அருச்சுனாவை நினைவுபடுத்தினார். தோழர் அருச்சுனா வறிய குடும்ப சூழலில் இருந்து யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் படித்துக் கொண்டிருந்தவர். போராட்டத்திற்காக படிப்பைத் துறந்து முழுநேரமாக ரெசோவில் பணி செய்தவர். மற்றவர்களைப் போல் தோழர்களை கைவிட்டு தப்பி ஓடாமல் கடைசிவரை நின்று போராடியவர்.

மேலும் சில விபரங்கள்.

தோழர் கௌரிகாந்தன் - இந்தியா
முத்து - லண்டன்
ராஜன் - கனடா
சேரன் - நெதர்லாந்து
தவநாதன் - இலங்கை
ஐபி மூர்த்தி - இந்தியா
கப்பி மகிழ்ச்சி - இலங்கை
தமிழ் - சவூதிஅரேபியா.
குருபரன் - லண்டன்
தீபநேசன் - கனடா
தனஞ்செயன் - சுவீஷ்
கலா - அவுஷ்ரேலியா
கண்ணாடி ரகு - அமெரிக்கா
மேற்கண்டவர்களோடும் அசோக் தோழருக்கு தொடர்பு இருப்பதாக அறியப்படுவதால் அசோக் தோழர் தயவு செய்து இந்த முயற்சியை மேற்கொள்ளவும்.

10. panan on March 12, 2011 1:41 pm

ஜென்னி - தளமகாநாட்டில் எல்லாப் பங்குபற்றாளர்களினதும் பார்வை உங்களுக்கும் சிவராமிற்கும் எதிராகவே இருந்தது. நீங்கள் உட்பட பின்தளத்திலிருந்து வந்திருந்த அனைவரும் சளாப்பலாகவே கதைத்தீர்கள். புளொட் நாங்கள் அரசியல் ரீதியாக வளர்வதற்குக் காரணமாக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. அதேவேளை ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் பொதுமக்கள் போராட்டத்தை விட்டு அன்னியப்படுவதற்கும் காரணமாக இருந்தது. புலிகள் புளொட்டைத் தடைசெய்த போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கோட்டையைச் சுற்றிக் காவலுக்கு நின்ற புளொட் உறுப்பினர்கள் "நாம் கோட்டைச் சென்றியிலிருந்து வெளியேறுகிறோம் நீங்கள் அந்த இடங்களைக் கைப்பற்றலாம்" என்று கோட்டை இராணுவத்தினருக்குத் தகவல் அனுப்புமளவிற்குப் புளொட் சீர்கெட்டுப் போயிருந்தது.

11. panan on March 12, 2011 1:58 pm

கௌரிகாந்தன் தளமகாநாட்டைத் திட்டமிட்டபோது மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். பல சந்தர்ப்பங்களில் அவருடன் கருத்தாடியிருக்கிறேன். அதே கௌரிகாந்தன் 90களில் புலிகளுடன் ஒத்தோடினார். எந்த இடத்திலும் தன்னளவில் அவர் நேர்மையாக இருந்தாரா?

12. Ajeevan on March 12, 2011 2:17 pm

ஜென்னி தலைமையில் 15 பேரளவு அடங்கிய (ஐரோப்பிய) குழுவொன்று ஈஎன்டீஎல்எப் நெடும்பயண இறுதி நிகழ்வில் கலந்து சிறப்பிக்க லண்டனில் இருந்து செல்வதாக லண்டனில் இருந்து அறிய முடிகிறது. உங்கள் நடவடிக்கை எதுவாக இருக்கப் போகிறது?

13. Ajeevan on March 12, 2011 3:11 pm

//எனது ஆதங்கம் என்னவென்றால் இப்படியானவர்களை போராட வந்த உண்மையான நேர்மையானவர்களால் ஏன் வெல்ல முடியாமல் போனதென்று? - //

தலைமை; ஜால்ராக்களையும் ; பம்மாத்துகளையும் ; அலுகோசுவாக்களையும் (தூக்கு மரத்திலேற்றுபவர்கள்) ; தலையாட்டி மொம்மைகளையும் அருகே வைத்துக் கொணடது. இவர்களுக்கு தேவையானதை மட்டுமல்ல ; இவர்கள் சில குற்றங்களை செய்யவும் வழி விட்டது. அதை வைத்தே அவர்களை வாயே பேச முடியாதபடி நலங்கு போட்டு வைத்திருந்தது.

உண்மையான நேர்மையானவர்கள் ; வந்த பின் தங்ககூட்டுக்குள் அடைபட்ட கிளியின் நிலை என்பதை விட மோசமான நிலை. இன்றும் இயக்கங்கள் என்றால் ஏதோ மனிதநேயம் மிக்க மாகான்கள் வாழும் தியாக பீடம் என பெரும்பாலான தமிழர்கள் நம்புகிறார்கள்தானே? அதை விட்டு வெளியே வந்த எத்தனை பேர் உண்மையைச் சொல்கிறார்கள்? தேசத்தில் இது சும்மா ஒரு வெள்ளோட்டம் மட்டுமே? இதைவிட எத்தனை பேயோட்டம் வெளி வராமல் இருக்கிறது?

வெளிநாட்டில் நமது அவஸ்தைகளை ; நமது அடிமட்ட வேதனை அவலங்களை பகிர்ந்து கொள்ளாத நாமா; நமது போராட்ட அவலங்களை பகிரங்கமாக சொல்வோம்? கௌரவம் போயிடும்?

ஒரு பாலியல் வல்லுறவை மட்டும் பெரிதாக்கி ; உண்மையை கொண்டு வர முடியாதவர்கள் ; எப்படி ஒரு பெரிய மாபியா கும்பலின் அலுகோசுவாத்தனத்தை கொண்டு வரப் போகிறார்கள்? இங்கே காண முடிந்தவை யாரையாவது பலிக்கடாவாக்கி தான் கழன்று கொள்ளும் பிலாத்து கைகழுவல்களேயாகும். இன்றே இப்படி என்றால் ; அட …… அன்று எப்படி இருந்திருக்கும்?

இது கழகத்துக்கு மட்டுமல்ல ; அனைத்து தமிழ் விடுதலை அமைப்புகளுக்குள்ளும் இருந்த ஒரு மோசமான நிலைதான். இதெல்லாம் ஒருபோதும் மாறாது. சுத்துமாத்துகளுக்கு முன்னால் நேர்மையானவர்களால் வெல்ல ஒரு போதும் முடியாது நானீ. நமக்கெல்லாம் இது சரிவராது. இதற்கெல்லாம் அங்கும் பாடி இங்கும் பாடி ஆடி ஆடிக் கறக்கத் தெரிந்த சுத்துமாத்துகளால்தான் இதுகளுக்குள் சுழியோட முடியும்.

அன்று இந்தியா தவறு என்று சொன்னவர்கள் ;இன்று அது சரியென சொல்கிறார்கள். அன்றும் இன்றும் என்றும் இந்தியா; ஈழத் தமிழரை வைத்து சிறீலங்கா என்ற நாட்டுக்குள் சதுரங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறது. சிறீலங்கா அமைதியாக இருக்க வேண்டும் என்பதை விட சிறீலங்கா தனது கைப்பொம்மையாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே அவர்களது குறிக்கோள். சிறீலங்காவின் தலைமகளுக்கு நாட்டில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரச்சனை தீர்வதை விட ; தனக்கு பிரச்சனை வராமல் இருக்க வேண்டும் என்பதே சிறீலங்கா தலைமைகளில் குறி. அனைத்து மக்களும் பாவம். மழை பெய்யும் போது எனது கிணறும் நிறைகிறது என்பது போல ஏதோ வாழ்கிறார்கள்.

புலிகளின் அழிவுக்கு பிறகு புலத்தில் வாழ்வோருக்கு தன் பெயரை எங்காவது பொறித்துக் கொள்ள ஒரு அரசியல் தேவைப்படுகிறது. அது யானையாயிருந்தால் என்ன? பூனையாயிருந்தாலென்ன? இந்தியாவாயிருந்தாலென்ன எத்தியோப்பியாவாக இருந்தாலென்ன தத்தமது பம்மாத்து குணாதிசயங்களின் ஊடாக தம்மை வாழ வைக்க முயல்கிறார்கள்.

இவர்கள்தான் அன்றும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். இவர்களில் எங்கே நேர்மையானவர்கள்? உண்மையானவர்கள்? ஏதோ ஓரிருவர் இருக்கலாம்? அவர்களில் பலர் அழிந்திருக்கலாம். சிலர் இன்னும் அமைதி காக்கலாம்.

தாய் மண் மீட்க புறப்பட்டவர்கள் ; இப்போது கார்த்திகை பூ எழுச்சிக்காக இறங்கி வந்துள்ளார்கள். நல்ல காலம் சுனாமி இன்னொரு முறை இலங்கையை தாக்கவில்லை. இல்லையென்றால் அதை வைத்து தமது சுரங்களை மீண்டும் ஒரு முறை நிரப்பியிருப்பார்கள்?

யாராவது அங்கு வாழும் மக்களை நேசிக்கிறீர்களா? அவர்களுக்கு நேரடியாக எதையாவது செய்யுங்கள். இந்த அரசியல் புரோக்கர்களை புறம் தள்ளுங்கள். அன்று இந்த சமூகம் திருந்தும்.

14. நந்தா on March 12, 2011 4:53 pm

கட்டுரையாளர் எதற்காக இந்த இயக்கத்தில் இணைந்தார் அல்லது எந்தப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டு அதனை தீர்க்கப் போனார் என்று சொல்லக் காணோம்.

போன பின்னர் நடந்த குடுமிப் பிடிச் சண்டைகள் பற்றிப் பிரலாபித்து இயக்கத்து முட்டாள்த்தனங்களை இன்னமும் நியாயப்படுத்துவதில் மும்முரமாக இருப்பதிலிருந்து இவர்கள் இன்னமும் திருந்தவில்லையென்ரே தெரிகிறது!

15. tholar on March 12, 2011 7:23 pm

வணக்கம் ஜென்னி
நீங்கள் ஒரு சட்டை போட்ட கலைஞர் கருணாநிதி.

நீங்கள் இருவரும்தான் இறந்தவர்களை எண்ணி இன்றும் கண்ணீர் விடுபவர்கள். உங்களுக்கு நிறைய உண்மைகளை எழுதவேண்டும் போல் உள்ளது துரதிஸ்டவசமாக உங்கள் ஞாபகசக்தி தடுக்கிறது போல் தெரிகிறது. இருப்பினும் சில உண்மைகளை இங்கு நான் தருகிறேன் தவறு என்றால் என்னுடைய ஞாபகசக்தியும் ஆட்டம் காணத் தொடங்கி விட்டதென்றே பொருள்.

இது கதையல்ல நுற்றுக்கணக்கான தோழர்களின் முன் நடந்த சம்பவம். தள மகாநாட்டின் முதல்நாள் பாதுகாப்புக் கருதி மகாநாடு முடியும்வரை எவரும் உள்ளே வரவோ வெளியே போகவோ தடைவிதிக்கப் பட்டிருந்தது. மூன்றாம் நாள் உங்களை பின் தளத்திற்கு வரும்படி உங்கள் வன்செயல் அதிபரின் கடிதம் வாசிக்கப்பட்டது. ஞாபகமுண்டா? அன்றைய மகாநாட்டுக் குழு அதை ஏற்க மறுத்து போகமுடியாது என்று சொன்ன போது அதையும் மீறி மகாநாட்டை விட்டு நீங்கள் வெளியேறிப் போனது ஞாபகமுண்டா? நீங்கள் வெளியேறிய பின் 48 மணி நேரத்திற்குள் மகாநாடு நடைபெற்ற பிரதேசம் முழுவதும் இலங்கை விமானப் படையின் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதால் மகாநாடு குறித்த நாள்வரை நடைபெறாது முன்கூட்டியே முடிவுக்கு வந்தது ஞாபகம் உண்டா?

இப்படிப் பல சம்பவங்கள் கைவசம் உள்ளது ஆனால் ஜென்னியின் ஞாபக சக்தியை கருத்திற் கொண்டு ஒன்றொன்றாக தருகிறேன்.

16. mao on March 12, 2011 7:37 pm

எந்த இயக்கத்தில் இருந்தார்? எந்த இயக்கத்தில் இருந்திருக்க வேண்டும்!?? என்பதை தெளிவு படுத்துவது நந்தாவின் அறிவுக்குட்பட்டது. புலம்பெயர் தமிழர்கள் தாம் புத்திசாலிகள் என்பதை நிறுவமுற்படுவது எந்தவிதத்திலும் அறிவுசார்ந்த தல்ல.

ஒரு மதவிரோதிக்குரிய சகல லட்சணங்களை உள்ளடக்கியவரே கனடாவாசியான நந்தா. நானும் ஒரு மதவிரோதியே!. ஆனால் அந்த மதத்தைப் பின்பற்றுகிற லட்சக்கணக்கான கோடிக்கணக்காண உழைப்பாளி மக்களின் விரோதியல்ல.

17. Ajeevan on March 12, 2011 8:11 pm

//நந்தா - கட்டுரையாளர் எதற்காக இந்த இயக்கத்தில் இணைந்தார் அல்லது எந்தப் பிரச்சனையால் பாதிக்கப்பட்டு அதனை தீர்க்கப் போனார் என்று சொல்லக் காணோம். போன பின்னர் நடந்த குடுமிப் பிடிச் சண்டைகள் பற்றிப் பிரலாபித்து இயக்கத்து முட்டாள்த்தனங்களை இன்னமும் நியாயப்படுத்துவதில் மும்முரமாக இருப்பதிலிருந்து இவர்கள் இன்னமும் திருந்தவில்லையென்றே தெரிகிறது!//

நந்தா , எனக்குத் தெரிந்து ஒரு இசுலாமியரை இலங்கையில் சிறு வயதில் பழக்கம். அவர் அபின் சாப்பிடுபவர். அத்தோடு அபின் விற்பார். இவர் எங்கள் வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரர்.

ஒரு நாள் "தாகீர் காக்கா, இது கறுப்பாக இருக்குதே? இனிக்குமா? கசக்குமா?" என்று கேட்டேன்.

நான் அதை சுவைத்துப் பார்க்க விரும்பும் நோக்கத்தை புரிந்து கொண்டு " தம்பி , வாழ்கையில ஒரு நாளும் இதை தொட்டுட வேணாம். இது என்னை தொடாத என்று சொல்லும். அதையும் மீறித் தொட்டா , இனி என்னை விட்டுடாதேண்ணு நம்மளை கொன்று போடும். இந்த எண்ணமே வேண்டாம். " என்று என்னை துரத்தி விட்டார்.

அவர் பணம் இல்லாமல் ஏழ்மையில் வாடிய போது அபின் வாங்க பணம் இல்லாமல் சில களவுகளை செய்து அபின் வாங்கி சாப்பிட்டு , இறந்து போனார். நேரத்துக்கு அபின் சாப்பிட முடியாத போது அவர் பட்ட வேதனையை நான் பார்த்திருக்கிறேன். அபினை அவர் கெட்டதென்றாலும் , அவரால் அதை விட முடியவில்லை.

அதே நிலைதான் பலருக்கு. தாம் கெட்டால் பரவாயில்லை. அடுத்தவரைக் கெடுத்து தாமும் கெடுவதுதான் தாங்க முடியாத சோகம்.

நான் இயக்கத்துக்கு எப்படி வந்தேன். வந்த பாதையில் என்ன நடந்தது என எழுதுலாம் என யோசிக்கிறேன். அதை தேசம் கொண்டு வருமா தெரியாது? அங்கே என்னோடு நகர்ந்த உண்மைகளை எழுதலாம். அங்கே என் தவறுகள் என்ன? ஏன் நடந்தது எனவும் எழுதுவேன். தேசம் பச்சைக் கொடி காட்டி தணிக்கை செய்யாமல் இருக்க வேண்டும். அதற்கு உறுதியளிக்க வேண்டும்.

உதாரணத்துக்கு நான் முன்னர் எழுதிய ஒரு பகுதி:

-http://ajeevan-way.blogspot.com/2008/06/blog-post.html

18. பல்லி on March 12, 2011 10:11 pm

//தோழர் கௌரிகாந்தன் - இந்தியா
முத்து - லண்டன்
ராஜன் - கனடா
சேரன் - நெதர்லாந்து
தவநாதன் - இலங்கை
ஐபி மூர்த்தி - இந்தியா
கப்பி மகிழ்ச்சி - இலங்கை
தமிழ் - சவூதிஅரேபியா.
குருபரன் - லண்டன்
தீபநேசன் - கனடா
தனஞ்செயன் - சுவீஷ்
கலா - அவுஷ்ரேலியா
கண்ணாடி ரகு - அமெரிக்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மேற்கண்டவர்களோடும் அசோக் தோழருக்கு தொடர்பு இருப்பதாக அறியப்படுவதால் அசோக் தோழர் தயவு செய்து இந்த முயற்சியை மேற்கொள்ளவும்.//

ஆக எல்லோரும் நலமுடனும் நலமான நாட்டிலும் தம்வாழ்வை நிவர்த்தி செய்து விட்டார்கள், ஆனால் இவர்களை நம்பி போனவர்கள் நிலை என்பதே?? ஏன் கேலியோ அல்லது கேள்வியாக இங்கு வலம் வருகிறது;;

//தோழர் கௌரிகாந்தன் - இந்தியா//
இவரைதான் சுப்பையா என சொல்லுவார்களா?? அப்படியாயின் இவரும் இவரும்??????

19. **சாந்தன்** on March 13, 2011 2:21 am

//….நான் இயக்கத்துக்கு எப்படி வந்தேன். வந்த பாதையில் என்ன நடந்தது என எழுதுலாம் என யோசிக்கிறேன்…..//
அஜீவன்,

எழுதுங்கள் நன்றாக எழுதுங்கள். ஆனால் இதேபோலத்தான் புலியிலும் நடந்தது எலியிலும் விழுந்தது என ஒழுங்கைக்குள் கிடாய் வெட்டுவதைத்தவிர்த்து உங்கள் இயக்கத்தில் நடந்தவற்றை மட்டும் எழுதுங்கள். மற்றவர்களின் சிக்கல்களை இழுத்து புளொட் கேவலங்களை "சொ∴ப்ற் பெடலிங்" செய்ய முற்படவேண்டாம்.

உதாரணம்:
ஒரு பாலியல் வல்லுறவை மட்டும் பெரிதாக்கி ; உண்மையை கொண்டு வர முடியாதவர்கள் ; …………இது கழகத்துக்கு மட்டுமல்ல ; அனைத்து தமிழ் விடுதலை அமைப்புகளுக்குள்ளும் இருந்த ஒரு மோசமான நிலைதான். இதெல்லாம் ஒருபோதும் மாறாது.

இவ்வாறான விளையாட்டுகளைத் தவிர்த்தாலன்றி உங்கள் புளோட் காப்பிய அரங்கேற்றத்தில் பிரயோசனம் இல்லாமல் போய்விடும்!

20. **நந்தா** on March 13, 2011 5:39 am

மாவோ:
இந்தப் பெயர் வைத்திருப்பதால் தங்களைக் "கம்யூனிஸ்ட்" என்றோ "இடதுசாரி " என்றோ நான் நினைக்கவில்லை.

நான் புலம் பெயர்ந்தபடியால் "அதிமேதாவி" என்று காட்டநினைப்பதாக எழுதுவது சுத்த பாமரத்தனம். ஊரில் இருந்த பொழுதும் இதனையே எழுதினேன். கேட்டேன். அப்பொழுதும் பதில் இல்லை. ஆனால் "துரோகி" என்று மண்டையில் போடப்படுவாய் என எச்சரிக்கைதான் வந்தது. நாட்டை விட்டுப் போக மாட்டென் என்ற எனது பலநண்பர்கள் காணாமல் போய் பல ஆண்டுகள் கடந்து விட்டன.

இன்றும் அதே கேள்விகளை 30 ஆண்டுகள் கழிந்த பின்னரும் கேள்க்கிறேன். பதிலைக் காணோம். ஆனால் கேள்வி கேள்க்கும் உனக்கு மூக்கில் பல்லு முளைத்திருக்கிறது, தலையில் சொட்டை விழுந்திருக்கிறது என்ற சம்பந்தமில்லாத விமர்சனம்தான் வருகிறது.

மத விரோதம் என்பதற்கும் மத விமர்சனம் என்பதற்கும் உள்ள வேறுபாடு புரிந்திருக்கும் என்றும் எண்ணுகிறேன்.

30 வருடத்துக்கு முன்னர் நானும் எனது நண்பர்களும் "இந்த ஈழம் என்பது நடக்க முடியத காரியம்.10% சனம் 70% சனத்துடன் துப்பாக்கி அல்ல அனுகுண்டு தூக்கினாலும் 10% சனம்தான் துயரத்தை அனுபவிக்கும். மண் குடம் இரும்புக் குடத்துடன் மோதினால் யாருக்கு நட்டம், " என்றுதான் கேட்டோம்.

பதில் கிடைக்கவில்லை. பயஙகரப்படுத்தப்பட்டோம்.

இயக்கத்துக்குப் போனவர்களிடம் கேட்டோம் "இதற்கெல்லாம் யார் பணம் கொடுக்கிறார்கள்" என்று. ஒருவர் சொன்னார் "வெளிநாடுகள்" என்று. பலருக்கு பணம் எங்கிருந்து வருகிறது என்பது கூடத் தெரியவில்லை.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அப்பொளுதும் கேட்டோம் “வெளினாடா, அவனுக்குத் தமிழ் பாஷயில் அவ்வளவு அக்கறையா” என்று. “அந்த மயிரெல்லாம் உனக்குத் தேவையில்லை. கனக்கக் கேட்டாயெண்டால் லயிட் போஸ்ட்டில் தொங்குவாய்” என்ற கர்ச்சனைதான் வந்தது.

மவுனம் காத்தோம். வங்கிக்கொள்ளைகள், சகோதரப்படுகொலைகள், மாவீரர்கள், ராஜிவ்காந்தி, வ்ரதராஜபெருமாள், உலகின்நாலாவது பெரிய இராணுவத்தை தோற்கடித்தோம்,நொர்வெ, டக்ளஸ், முள்ளிவாய்க்கால், கடல்கடந்த ஈழம், என்று பல கண்டாயிற்று.

இப்பொளுதும் கேள்க்கிறோம்(காணாமல் போனநண்பர்களுடன் சேர்ந்துதான்) இயக்கத்துக்கு ஏன் போனாய், என்ன பிரச்சனை தீர்க்கப் போனாய் என்று.

இவ்வளவு ஆனதுக்கப்புறமும் முறைக்கிறாங்கப்பா. பதில் சொல்லவெ முடியாது. முடிந்தால் நீயே கண்டு பிடி என்று விறைப்பாய்த்தான் சொல்லுறாங்க!

ஒன்னு மட்டும் புரியுது, சாமியோவ்.வீட்டில எலிப்பிரச்சனை என்னு சொல்ல ஒரு பயல் சொன்னான் தீப்பெட்டி தர்ரேன். வீட்டைக் கொளுத்திடு. எலிப்பிரச்சனை முழுதும் தீர்ந்திடும் என்றான்.

வீடு கொழுத்தியாகிவிட்டது. எலிப்பிரச்சனை மறந்தாகிவிட்டது.

21. பல்லி on March 13, 2011 8:15 am

//? நீங்கள் வெளியேறிய பின் 48 மணி நேரத்திற்குள் மகாநாடு நடைபெற்ற பிரதேசம் முழுவதும் இலங்கை விமானப் படையின் விமானங்கள் குண்டு வீசித் தாக்கியதால் மகாநாடு குறித்த நாள்வரை நடைபெறாது முன்கூட்டியே முடிவுக்கு வந்தது ஞாபகம் உண்டா?//

ஆகா அப்போ ஜென்னிக்கு இலங்கை ராணுவத்துடன்
தொடர்பு இருந்ததா?? அதுவும் விமான தாக்குதல் நடத்தும்
அளவுக்கு அவர் ராணுவத்துக்கு தகவல் கொடுக்கும் பயிற்ச்சியை பெற்று
கொண்டாரா?? எல்லாமே தலையை
சுற்றுகிறது,,?? இதில் உயிர் தேசம் ஏதும் நடக்கவில்லையா??

22. பல்லி on March 13, 2011 12:30 pm

//இப்பொளுதும் கேள்க்கிறோம் (காணாமல் போன நண்பர்களுடன் சேர்ந்துதான்) இயக்கத்துக்கு ஏன் போனாய், என்ன பிரச்சனை தீர்க்கப் போனாய் என்று.//

இது நியாயமான கேள்விதான். எனக்கும் அந்த கேள்வி
கேட்டதால் பல அசம்பாவிதங்கள்;;;;;;;;

23. panan on March 13, 2011 1:50 pm

விமானத்தாக்குதல் சில கிலோமீற்றர் துரத்தில் நடந்தது.தளமகாநாடு நடந்த இடத்திற்கு இராணுவம் வந்தால் எப்படித் தப்புவது எனக் காண்டீபன் விளக்கமளித்தர். புளொட்டின் இராணுவ அறிவின் சீத்துவக்கேடு அன்று பல்லிளித்தது.

24. சாந்தன் on March 13, 2011 5:43 pm

///……அதுவும் விமான தாக்குதல் நடத்தும்
அளவுக்கு அவர் ராணுவத்துக்கு தகவல் கொடுக்கும் பயிற்ச்சியை பெற்று
கொண்டாரா?? எல்லாமே தலையை
சுற்றுகிறது,,?? ,…..//

இல்லை இல்லை அப்படியெல்லாம் இருக்காது பல்லி.

எல்லாம் புளொட் வக்கிர பிரச்சாரப்பிரிவு பழக்கதோசம்.
இப்படித்தான் கடற்கரையில் குட்டிமணி குழுவினரை பிரபாகரன காட்டிக்கொடுத்தார் பிபாகரன் வரவில்லை ராணுவம் வந்தது எனக் கதை விடும் கூட்டம் இப்போது சொந்த இயக்கத்தவரையும் அதே வக்கிர புத்தியுடன் தாக்குதல் நடத்துகிறது.
புளொட் பிரச்சாரப்பிரிவின் கொட்டில்(அரசியல் வகுப்பு) பழக்கம் சுடுகாடு வரை போல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இருக்கிறது!

25. jeyarajah on March 13, 2011 11:02 pm

பக்கத்து வீட்டிலை பல்லிக்குப் பலமாகத்தான் பறைமேளம். புளொட்டில் இருந்தவர்களைவிட கழகத்தில் இல்லாத ஒருத்தருக்கு இவ்வளவும் எப்படித் தெரியும் என்ற அங்கலாய்ப்புத்தான்.

வலதுசாரி இடதுசாரி என்பதைவிட சராசரி மனிதநேயம் உள்ள மனிதனாக வாழ்வதே மேல்.

இயக்கத்துக்கு ஏன் போனாய் என்ன பிரச்சனை தீர்க்கப் போனாய் என நந்தா கேட்டதற்கு மனப்பூர்வமாக யாரும் பதில்தர மாட்டார்கள்.

மார்க்ஸ் முதல் கடாபிவரை பதில் எழுதிப் பிரயோசனம் இல்லை.

26. நந்தா on March 14, 2011 3:20 am

இயக்கத்துக்குப் போனவர்கள் சாதாரண உழப்பாளிகளை விட மேலானவர்கள் என்ற திமிர்த்தனம் இன்னமும் போகவில்லை. அது மாத்திரமல்ல அவர்கள் முகம் தெரியாத அன்னியர்களுக்காக கூலிகளாக இருந்தார்கள் என்பது அதைவிடக் கேவலம்!

இவர்கள் நாள் கணக்கில் எழுதுவது உண்மையுமல்ல, மக்களுக்கு பயனுடையதுமல்ல.

இயக்கத்துக்கு எந்தப் பிரச்சனை தீர்க்கப்போனாய் என்றால் மவுனம் காக்கும் இவர்கள் இப்பொழுது சந்தையில் நடந்த அடிபிடிகளில் தங்களின் வீர சாகசங்கள் பற்றி வர்ணிக்கிறார்கள்.

இது தேவையா?

Name (required)

Email (required)

Website

உங்கள் கருத்தை பகிர்ந்து கொள்ளுங்கள்
English பாமினி உச்சரிப்பு

அனுப்புக

வகைகள்.: லண்டன் குரல் (65) பார்

எழுதுபவர்கள்.: பாலச்சந்திரன் எஸ் (1) பார்

- பழயவை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்